# ம.மா/கொத்/காஹிரா முஸ்லிம் வித்தியாலயம்

## அஹஸ்வெவ,ஹபுகஸ்தலாவை



# தரம் 03 மாணவர்களுக்கான விடுமுறைகால விஷேட பயிற்சிக்கையேடு – 2020

"நேரத்தை வீணாக்காதீர், நேரம் பொன் போன்றது"

ஏ.எஸ்.எம்.அஸ்லம்

## அன்பார்ந்த பெற்றார்களே!
## அஸ்ஸலாமு அலைக்கும்

- இங்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சிகள் யாவும் உங்கள் பிள்ளைகளாலேயே செய்யப்படல் வேண்டும்.
- பயிற்சிகளை செய்வதற்கு வழிகாட்டுங்கள். விடைகளை சொல்லிக் கொடுக்க வேண்டாம்.பயிற்சிகளை படிப்படியாகச் செய்யவிடுங்கள்.
- இக்கையேட்டிலுள்ள பயிற்சிகள் அனைத்தும் 2020 ஆம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்திலுள்ள விடயங்களாகும். எனவே இதற்கு முக்கியத்துவமளித்து செயற்படுங்கள்.
- மனனம் செய்ய வேண்டிய விடயங்களை மனனமிடுவது அவசியம்.
- 2 ஆம் 3 ஆம் 4 ஆம் வாய்ப்பாடுகளை மனனமிடச் செய்து, அவற்றைப் பரிசீலிக்கவும்.
- மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த, பாடநூல்களையும் கதைப்புத்தகங்களையும் வாசிக்கச் செய்யவும்.
- வாசித்த விடயங்களைக் கேட்கவும்.
- தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் தொடர்ச்சியாக விடுமுறை வழங்கப்பட்டிருப்பதனால், வீட்டில் கற்பதற்காக நேரசூசியொன்றைத் தயாரித்துக் கொள்ளவும்.
- உங்கள் பிள்ளைகளை ஐவேளை தொழவைக்கவும்.
- உங்கள் பிள்ளைகளை உங்களது கண்காணிப்பிலேயே வைத்துக்கொள்ளுங்கள்.
- வயது கூடியவர்களுடன் உங்கள் பிள்ளைகளை சேரவிடாதீர்கள்.
- பிள்ளைகளை தொடர்ச்சியாக விளையாட்டுக்களில் ஈடுபடுத்தாதீர்கள்.
- உங்களின் மேற்பார்வையுடன் நவீன சாதனங்களை கற்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும்.
- இந்தக் கையேட்டிலுள்ள பயிற்சிகளில் பெற்றார்களுக்கு ஏதேனும் சந்தேகமிருப்பின், தெளிவினைப் பெற்றுக் கொள்ள வட்ஸப் குரூப்பில் பதிவிடலாம்
- இப்பயிற்சிகளை உங்கள் பிள்ளைகள் முழுமையாக செய்த பிறகு வகுப்பாசிரியரிடம் பயிற்சிகளைத் திருத்துவதற்காக ஒப்படைக்கப்படல் வேண்டும்.
- உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்திற்கு எங்களுடன் தொடர்புகளைப் பேணவும்.

**ஜஸாக்குமுல்லாஹுஹைறன்**

# ரகர, றகர ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

| சொற்கள் | |
|---|---|
| 01. அரம் - ஒரு ஆயுதம் | அறம் - தர்மம் |
| 02. அரை - இரண்டில் ஒன்று | அறை - இல்லத்தின் ஒரு பகுதி |
| 03. கரி – அடுப்புக்கரி/யானை | கறி - உணவு வகை |
| 04. கரை – கடற்கரை | கறை - கறை படிதல் |
| 05. கூரை - வீட்டின் மேற்பகுதி | கூறை - சேலை |
| 06. நிரை - வரிசை | நிறை - பாரம்/நிரப்பு |
| 07. பரவை - கடல் | பறவை – பட்சி |
| 08. பாரை - ஒரு மீன் / ஒரு கருவி | பாறை - கற்பாறை |

**உதாரணம்**

01. பழம் - நான் பழம் வாங்கினேன்.
    பழங்கள் - நாங்கள் பழங்கள் வாங்கினோம்.

02. கிளி - கிளி பறந்தது.
    கிளிகள் - கிளிகள் பறந்தன.

03. குதிரை - குதிரை வேகமாக ஓடியது.
    குதிரைகள் - குதிரைகள் வேகமாக ஓடின.

04. புத்தகம் - நான் புத்தகம் வாங்கினேன்.
    புத்தகங்கள் - நாங்கள் புத்தகங்கள் வாங்கினோம்.

மேலே உள்ள உதாரணத்தை விளங்கி பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

01. புலி வேகமாக ஓடியது.

    ................... வேகமாக ஓடின.

02. சேவல் கூவியது.

    ................... கூவின.

03. வானூர்தி வானில் பறந்தது.

    ................... வானில் பறந்தன.

04. புத்தகம் வாங்கினேன்.

    ................... வாங்கினோம்.

05. ................... வாசித்தேன்.

    ................... வாசித்தோம்.

Kahira -Grade 3 Work Sheet 2020

பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

**நான் மாலை கட்டினேன்.**

**நாங்கள் மாலைகள் கட்டினோம்.**

01. முயல் ஓடியது.

.......................................................................................

02. கணனி உடைந்தது.

.......................................................................................

03. சிங்கம் கர்ச்சித்தது.

.......................................................................................

04. பழம் வாங்கினேன்.

.......................................................................................

05. நான் வேகமாக ஓடினேன்.

.......................................................................................

ஒத்தகருத்துச் சொற்களை மனனம் செய்வோம்.

| | |
|---|---|
| அரசன் - | மனன்ன் |
| ஒளி – | வெளிச்சம் |
| ஆறு - | நதி |
| வீதி - | தெரு |
| நாடு – | தேசம் |
| சூரியன் - | கதிரவன் |
| கடல் - | சமுத்திரம் |
| விளக்கு – | தீபம் |
| ஆகாயம் - | வானம் |
| குளம் - | வாவி |
| தூரம் - | சேய்மை |
| துன்பம் - | வேதனை, இடர் |
| கண் - | விழி |
| முகம் - | வதனம் |
| விவசாயி - | உழவர் |
| அடக்கம் - | பணிவு |

| | |
|---|---|
| ஆசிரியர் - | ஆசான் |
| அறிவு – | ஞானம், புலமை |
| குளம் - | வாவி |
| சந்திரன் - | மதி, திங்கள் |
| உலகம் - | அகிலம், வையகம் |
| கோபம் - | சினம் |
| அன்பு – | பரிவு , இரக்கம் |
| ஆசை – | விருப்பம், அவா |
| சூடு – | வெப்பம் |
| அண்மை – | சமீபம் |
| இன்பம் - | மகிழ்ச்சி, குதூகலம் |
| மழை - | மாரி |
| பெருமை - | அகங்காரம் |
| அமைதி – | மௌனம் |
| வயல் - | கழனி |
| கடிதம் - | மடல் |



Kahira -Grade 3 Work Sheet 2020

# னகர, ணகர வேறுபாட்டுச் சொற்கள்

| | |
|---|---|
| 01. அன்னம் - சோறு | அண்ணம் - உள்நாக்கு |
| 02. ஆனி - ஒரு மாதம் | ஆணி - இரும்பு ஆணி |
| 03. ஊன் - இறைச்சி | ஊண் - உணவு |
| 04. கனை - ஒலி | கணை – அம்பு |
| 05. பனி – குளிர் | பணி - தொழில் |
| 06. பானம் - நீராகாரம் | பாணம் - அம்பு |
| 07. மனம் - உள்ளம் | மணம் - வாசனை |
| 08. வானம் - ஆகாயம் | வாணம் - மத்தாப்பு |

**னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்குக.**

**உதாரணம்:-**

**ஊன் :- சிங்கம் ஊனை மிகவும் விரும்பி உண்ணும்.**

01. பானம் :-.......................................................................................................

02. வானம் :-.......................................................................................................

03. பாணம் :-.......................................................................................................

04. ஆனி :-.......................................................................................................

05. அன்னம் :-.......................................................................................................

06. மணம் :-.......................................................................................................

கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை பொருத்தமான இடைவெளிகளில் வைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.

( ஆணி, பனி, பணி, மனம், வாணம், ஆனி, மணம் )

01. தச்சன் கடைக்குச் சென்று ................ யை வாங்கினான்

02. மலை நாட்டுப் பகுதியில் காலை வேளையில் .......... மூட்டம் இருந்தது.

03. தொழிலாளர்கள் தமது.................. களைச் செய்தனர்

04. எனது தோழி ருகையா ............... மாதம் பிறந்தாள்.



Kahira -Grade 3 Work Sheet 2020

05. பூக்களில் இருந்து.................. வீசியது.

06. புத்தாண்டின் போது சிறுவர்கள் ..................... இட்டு மகிழ்ந்தனர்.

07. எமது ............. தூய்மையாக இருக்க வேண்டும்.

## எதிர்க் கருத்துச் சொற்களை மனனம் செய்வோம்

01. இயற்கை – செயற்கை
02. வெற்றி – தோல்வி
03. இன்பம் - துன்பம்
04. மாரி - கோடை
05. தொடக்கம் -முடிவு
06. சுத்தம் - அசுத்தம்
07. நன்மை - தீமை
08. காடு - நாடு
09. ஒற்றுமை - வேற்றுமை
10. புதுமை - பழைமை
11. சிரிப்பு - அழுகை
12. வீரன் - கோழை
13. உறக்கம் - விழிப்பு
14. உறவு - பகை
15. நண்பன் - பகைவன்
16. வானம் - பூமி
17. ஆசை - நிராசை
18. ஆக்கம் - கேடு
19. மண் - விண்
20. ஏழை - பணக்காரன்
21. நீதி - அநீதி
22. சோம்பல் - சுறுசுறுப்பு
23. சூடு - குளிர்
24. அமைதி - ஆரவாரம்

## எதிர்க்கருத்துச் சொற்களை இணைக்குக.

| | | |
|---|---|---|
| மாரி | | ஆரவாரம் |
| புதுமை | - | சுறுசுறுப்பு |
| ஆக்கம் | | கோழை |
| அமைதி | | கேடு |
| சோம்பல் | | பழைமை |
| வீரன் | | கோடை |
| நண்பன் | | பழைமை |
| புதுமை | | பகைவன் |
| ஏழை | | பகை |
| உறவு | | பணக்காரன் |

Kahira -Grade 3 Work Sheet 2020

## நிறுத்தக் குறிகள்

முற்றுப் புள்ளி ( . )

காற்புள்ளி ( , )

வினாக்குறி ( ? )

## உதாரணம்

- எனது பாடசாலையின் பெயர் காஹிரா முஸ்லிம் வித்தியாலயமாகும்.
- ருஸ்தி , ஹுஸ்னி , சாபிக் ஆகியோர் எனது நண்பர்களாவர்.
- மரங்கொத்தி பூச்சிகள் , பழங்கள் , விதைகள் என்பவற்றை உண்ணுகின்றன.
- உனது பெயர் என்ன?
- எலிகளை ஒழிக்க என்ன செய்யலாம்?

பின்வரும் நிறுத்தக் குறிகளுள் பொருத்தமான நிறுத்தக் குறிகளை வாக்கியங்களில் இட்டு வாசியுங்கள்.

01. அப்பா என்னை அழைத்துச் சென்றார்
02. மரப்பொந்துகளில் கிளிகள் வாழ்கின்றன
03. இவை பழங்கள் விதைகள் பூக்களின் மொட்டுகள் போன்றவற்றை உண்கின்றன
04. கிளியின் அலகு பலம் வாய்ந்தது
05. இது ஒரு வேலையா
06. நீலத் தொட்டி எதற்கு
07. நாய் இறைச்சி சோறு மீன் என்பவற்றை உண்ணுகின்றது
08. காகிதத்தைக் கண்டால் கணணீர் விடும் அது என்ன
09. உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா
10. செம்மஞ்சள் தொட்டி எதற்கு

Kahira -Grade 3 Work Sheet 2020

**பின்வரும் நிறுத்தக்குறிகளைப் பந்தியில் தரப்பட்டுள்ள கட்டங்களில் பொருத்தமுற இட்டு வாசியுங்கள்.**

**முற்றுப்புள்ளி ( . ) காற்புள்ளி ( , ) வினாக்குறி ( ? )**

உலகில் நிமிடத்திற்கு நிமிடம் பல சம்பவங்கள் நிகழ்கின்றன☐ எல்லாவற்றையும் நாம் அறிய முடிவதில்லை ☐ ஆயினும் முக்கிய நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும் ☐ அவற்றை எப்படி அறிந்து கொள்கின்றோம் ☐ பத்திரிகை ☐ வானொலி ☐ தொலைக்காட்சி ☐ இணையம் போன்றவற்றின் ஊடாக அறிந்து கொள்கின்றோம் ☐

பாடல்:- **மறவாதே**

பெற்ற தாயை மறவாதே
பேணும் தந்தையை மறவாதே

கற்ற குருவை மறவாதே
கடவுள் எண்ணம் மறவாதே

கல்வியை என்றும் மறவாதே
கற்றதைச் செய்ய மறவாதே

நல்லார் சொல்லை மறவாதே
நாட்டுப் பணியை மறவாதே

ஒழுக்கம் தன்னை மறவாதே
உண்மை பேச மறவாதே.

- தே.ப. பெருமாள்.

Kahira-Grade 3 Work Sheet 2020

பின்வரும் வினாக்களுக்கு மேலுள்ள பாடலை வாசித்து விடை எழுதுக.

01. பொய் என்பதன் எதிர்ச் சொல்லை பாடலில் இருந்து எழுதுக.......................

02. இறைவன் என்பதற்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.?.........................

03. நாங்கள் மறக்கக்கூடாதவர்கள் யாவர்?.........................................................

பாடல்:- **பூக்கள்**

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய வெள்ளைப் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
களிப்பைத் தரும் பூக்கள்
காற்றில் ஆடும் பூக்கள்
கவிஞர் பாடும் பூக்கள்
கொத்துக் கொத்துப் பூக்கள்
கொள்ளை அழகுப் பூக்கள்
மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்
அன்பைத் தரும் பூக்கள்
அழகுச் சிவப்புப் பூக்கள். - வி.என்.எஸ். உதயசந்திரன்

01. மேலே பாடலில் குறிப்பிடப்படும் நிறங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக

.................................... .................................... ................................

02. பூக்கள் எதைக் கவருகின்றன? ................................................................

03. பூக்கள் எதனைத் தருகின்றன?................................................................

04. பூக்கள் எவ்வாறு அழகுடையவை?..........................................................

கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களை பொருத்தமான இடைவெளிகளில் வைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.

( அரம் , அறம் , அரை , அறை , கரி , கறி , கரை , கறை )

01. குளக் ...............யில் முதலை ஒன்று இருந்தது.

02. அம்மா சமைத்த ................ மிகவும் சுவையாக இருந்தது.

03. எனது வீட்டின் முன் ............... யில் பாம்பு ஒன்று இருந்தது,

04. .................. செய விரும்பு.

05. எனது பாடசாலை வெள்ளை ஆடையில் மைக்............. பட்டிருந்தது.

06. யானைக்கு .............. என்றும் கூறுவர்.

07. எனது அக்கா அவரது பணத்தில் ............ பங்கை எனக்குத் தந்தார்.

08. தச்சன்........... கொண்டு வாளைத் தீட்டினான்.

Kahira -Grade 3 Work Sheet 2020

கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களை பொருத்தமான இடைவெளிகளில் வைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.
(கூரை , கூறை , நிரை , நிறை , பரவை , பறவை , பாரை , பாறை)

01. வபா கடைக்குச் சென்று .................. மீன் வாங்கி வந்தார்.

02. ஹனா மிருகக்காட்சி சாலைக்குச் சென்று ........................களைக் கண்டாள்.

03. அப்லா உமைமாவை விட ........................... கூடியவள்.

04. சல்மானும் சமீரும் உடற்பயிற்சி செய்வதற்காக ..................யில் நின்றனர்.

05. அந்தக் கற் .................... உடைந்து இருந்தது.


06. கடலுக்கு ......................... என்றும் கூறுவர்.

07. ஆயிஷாவின் அக்கா வாங்கிய ................... சேலை அழகாக இருந்தது.

08. நிஹானின் வீட்டுக் ................. அழகாக இருந்தது.

Sheet 2020

**படம் பார்த்து வர்கியங்கள் எழுதுவோம்.**



வாக்கியங்கள் எழுதும் போது நிகழ்காலத்திலேயே எழுதப்படல் வேண்டும். மேலே உள்ள படத்தை நன்கு அவதானித்து வாக்கியங்கள் எழுதுக.
உதாரணம்:-

01. அங்கு வானவில் அழகாகக் காணப்படுகின்றது.

02. வானம் பார்ப்பதற்கு மிகவும் வியப்பாக இருக்கின்றது.

03. படத்தில் கடற்பூக்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

04. நட்சத்திர மீன்கள் பார்ப்பதற்கு எழிலைத் தருகின்றது.

01. ..................................................................................................................................

02. ..................................................................................................................................

03. ..................................................................................................................................

04. ..................................................................................................................................

மேலே உள்ள படத்தை அவதானித்து பெயர்ச்சொற்கள் 08 எழுதுக.

உதாரணம்:- பறவைகள்

01. ............................................

02. ............................................

03. ............................................

04. ............................................

05. ............................................

06. ............................................

07. ............................................

08. ...........................................

Kahira -Grade 3 Work Sheet 2020

## படம் பார்த்து வர்கியங்கள் எழுதுவோம்.
## (வாக்கியங்கள் நிகழ்காலத்தில் எழுதப்படல் வேண்டும்)




01. ....................................................................................................................

02. ....................................................................................................................

03. ....................................................................................................................

மேலே உள்ள படத்தை அவதானித்து பெயர்ச்சொற்கள் 06 எழுதுக.

01. ........................................ 04. ........................................

02. ........................................ 05. ........................................

03. ........................................ 06. ........................................

Kahira -Grade 3 We

**பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி ( √ ) எனவும் பிழையாயின் பிழை ( x ) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுங்கள்.**

உதாரணம்:- **அதிகாலையில் சேவல்கள் கூவின. ( )**

01. காகங்கள் பறந்து சென்றது. ( )

02. சூரியன் அதிகாலையில் உதித்தன. ( )

03. மான்கள் வேகமாக ஓடின. ( )

04. பேருந்து பாதையில் சென்றன. ( )

05. ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்தார். ( )

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

"நாம் விரைந்து பட்டம் செயவோம்" என்று காந்தன் அவர்களை அழைத்தான். பட்டம் கட்டுவதற்கு கரீம் ஈர்க்கை எடுத்தான். அதனை அழுத்தமாகச் சீவி அளந்து முறிதத்தான். முரளி கடதாசியை எடுத்து அளவாக வெட்டினான். காந்தன் ஈர்க்குகளினால் பட்டத்தைக் கட்டினான். கடதாசியை அதன் மேல் ஒட்டினான். மேரி பட்டத்திற்கு வால் செய்தாள். கரீம் நூலைச் சுற்றினான்.

மேலே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கட்டத்தினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

கடதாசியை, பட்டத்தைக், ஈர்க்கை, வால், நூலைச் , திடலுக்கு

01. பட்டம் கட்டுவதற்கு கரீம் ........................................... எடுத்தான்.

02. முரளி ....................................... எடுத்து அளவாக வெட்டினான்.

03. மேரி பட்டத்திற்கு ..................................................... செய்தாள்.

04. காந்தன் ஈர்க்குகளினால் .......................................... கட்டினான்.

05. கரீம் ....................................................................... சுற்றினான்.

**மேலே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பட்டம் கட்ட வருமாறு நண்பர்களை அழைத்தவர் யார்?..............................

02. பட்டம் கட்டுவதற்கு ஈர்க்கை எடுத்தவர் யார்? ..................................

03. கடதாசியை அளவாக வெட்டியவர் யார்? ................................

04. கடதாசியைப் பட்டத்தின் மேல் ஒட்டியது யார்? .................................

05. பட்டத்திற்கு வால் செய்தவர் யார்? ..................................

- **உறுப்பமைய எழுதுவோம்.**

1. எனது பாடசாலையின் பெயர் காஹிரா முஸ்லிம் வித்தியாலயம்.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

2. எமது நாடு இலங்கை

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

உதாரணம்:- **நான் பாடம் படித்தேன்.**

**நாங்கள் பாடம் படித்தோம்.**

Kahira -Grade 3 Work Sheet 2020

**நான் பாடசாலைக்குச் சென்றேன்.**

**நாங்கள் பாடசாலைக்குச் சென்றோம்.**

01. நான் புத்தகம் வாங்கினேன்.

...................................................................................................

02. நான் கிளி வளர்த்தேன்.

...................................................................................................

03. நான் மணல் வீடு கட்டினேன்.

..................................................................................................

04. நான் குடை வாங்கினேன்.

..................................................................................................

05. நான் மாலை கட்டினேன்.

...................................................................................................

அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு கீழேயுள்ள பாடலடிகளில் விடுபட்டுள்ள சொற்களைப் பூர்த்தி செய்க.

| சீருடைய, அன்பு, தந்த |
|---|

சின்னச். சின்னப் பாவை

.............................. பாவை

அன்னை ................ பாவை

................ கொண்ட பாவை

Kahirn - Grade 3 Work Sheet 2020

| |
|---|
| கையும் , கண்ணும் , போலக் |

என்னைப்............... காலும்

என்னைப் போலக் ...............

இனிய ............... வாயும்

இயைந்திருக்கும் பாவை.

| |
|---|
| பொட்டு, பூவணிந்து, தொப்பி , பார்ப்பேன் |

சட்டை இட்டுப்............................

...................... இட்டுப் பார்ப்பேன்

...................... மிட்டுப் பார்ப்பேன்

...................... பார்ப்பேன்.

| |
|---|
| தந்தையை, குருவை, ஒழுக்கம், எண்ணம், என்றும், செய்ய, உண்மை, பணியை, நல்லார், தாயை |

**மறவாதே**

பெற்ற ................ மறவாதே
பேணும் ............... மறவாதே
கற்ற.............. மறவாதே
கடவுள் ........... மறவாதே
கல்வியை .............. மறவாதே
கற்றதை ................ மறவாதே
................... சொல்லை மறவாதே
நாட்டுப் ............... மறவாதே
............ தன்னை மறவாதே
............ பேச மறவாதே.

Kahira Grade Work Sheet 2020

## நூலகம் ஒன்றிலுள்ள அறிவித்தல்களை வாசிக்கவும்.

### அறிவித்தல் - 1

நூலகத்தில் அமைதியைப் பேணவும்.

### அறிவித்தல் - 2

நூலகத்திற்கு வரும்போது அங்கத்துவ அட்டையைக் கொணடு வரவும்.

### அறிவித்தல்- 3

நூலகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

### அறிவித்தல்- 4

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெறும்.

### அறிவித்தல்- 5

பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும்.

### அறிவுறுத்தல் - 01

புத்தகங்களை அனுமதியின்றி வெளியே எடுத்துச் செல்லாதீர்கள்.

### அறிவுறுத்தல் - 02

நூலகத்திற்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது.

### அறிவுறுத்தல் - 03

இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் தண்டப்பணம் அறவிடப்படும்.

### அறிவுறுத்தல் - 04

நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களை சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.

Kahira -Grade 3 Work sheet 2020

## அறிவுறுத்தல் - 05

நூலகத்தில் உள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

## அறிவுறுத்தல் - 06

சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.

## அறிவுறுத்தல் - 06

நூல்கள் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்து முடித்ததும் உரிய இடங்களில் வைத்து விட்டுச் செல்லவும்.

## பழமொழிகளை வாசிப்போம் அதனை மனனமிடுவோம்

01. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
02. அழுதபிள்ளை பால் குடிக்கும்.
03. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
04. ஆனைக்கும் அடி சறுக்கும்.
05. ஆழமறியாது காலை விடாதே.
06. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
07. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
08. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
09. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
10. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
11. பொறுத்தார் பூமியாள்வார்.
12. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

Kahira -Grade 3 Work Sheet 2020

**வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொற்களை இடுவதன் மூலம் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

01. அகத்தின் ............................ முகத்தில் தெரியும்.

02. அழுத பிள்ளை .............................. குடிக்கும்.

03. ஆனைக்கும் ................................ சறுக்கும்.

04. ஒன்றுபட்டால் .............................. வாழ்வு.

05. கூடி .......................................... கோடி நன்மை.

**சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழிகள் ஆக்குக.**

01. மட்டு / புத்தி / ஆத்திரக்காரனுக்கு

..........................................................................................................

02. விடாதே / காலை / ஆழமறியாது

..........................................................................................................

03. எழுத்து / கல்வி / சிலையில் / இளமையிற்

..........................................................................................................

04. பொன்னல்ல / மின்னுவதெல்லாம்

..........................................................................................................

05. வாழ்வே / குறைவற்ற / நோயற்ற / செல்வம்

..........................................................................................................

**கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொணடு வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

| |
|---|
| அழகாக, இயற்கையுடன், அழகை, அனைவரும், மகிழ்ச்சியுடன் |

01. அழகை ..................... விரும்புகின்றோம்.

02. நாம் வாழும் வீடு ................ இருக்க வேண்டும்.

03. நம் முன்னோர்கள் .................. வாழ்ந்தார்கள்.

04. நிம்மதியாக .................. வாழ்ந்தார்கள்.

05. மீன் தொட்டியின் ............... இரசியுங்கள்.

Kshira -Grade 3 Work Sheet 2020

**வாசிக்குக. மனனமிடுக.**

## இளமைப் பெயர்கள்

01. அணில் - பிள்ளை, குஞ்சு
02. பூனை - குட்டி, பறழ்
03. எலி - குஞ்சு
04. மான் - குட்டி, கன்று
05. குதிரை - குட்டி
06. மீன் - குஞ்சு
07. குரங்கு – குட்டி, பறழ்
08. கரடி - குட்டி
09. சிங்கம் - குட்டி, குருளை

## இளமைப் பெயர்கள்

01. நெல்- நாற்று
02. கிளி – பிள்ளை
03. மா – கன்று
04. மாடு – கன்று
05. வாழை - குட்டி
06. ஆடு - குட்டி
07. கமுகு - பிள்ளை, கன்று
08. கோழி - குஞ்சு
09. பனை - வடலி
10. பாம்பு - குட்டி

**இளமைப் பெயர்களைக் கொண்டமைந்த வாக்கியங்களை வாசிப்போம்.**

01. பூனைக் **குட்டி**கள் தாயுடன் விளையாடின.

02. குதிரைக் **குட்டி** தாயுடன் சேர்ந்து ஓடியது.

03. சிங்கம் தனது **குட்டி**களைக் கவனமாகப் பாதுகாத்தது.

04. எலிக் **குஞ்சு** அங்குமிங்கும் ஓடியது.

05. மான் **குட்டி**யைப் பார்க்க அழகாக இருந்தது.

06. விவசாயிகள் வயலில் நெல்லின் **நாற்று**க்களை நட்டனர்.

07. யாழ்ப்பாணத்திற்குச் சென்ற போது நான் பனையின் **வடலி**யைக் கண்டேன்.

08. புற்றினுள் பாம்புக் **குட்டி**கள் இருந்தன.

09. நிரோஷன் வாழைக் **குட்டி**களை நட்டார்.

10. நான் மாங்**கன்றை** நட்டேன்.

பொருத்தமான சொல்லினைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

01. அணில் - பிள்ளை என்பது போல, பூனை ..............................

(பிள்ளை, குஞ்சு, குட்டி)

02. மான் - குட்டி என்பது போல, எலி ........................................

( குஞ்சு, குட்டி, கன்று )

03. குதிரை - குட்டி என்பது போல, மீன் ..............................

( குருளை , குஞ்சு, குட்டி)

04. பசு – கன்று என்பது போல, சிங்கம் ..............................

(குருளை, குஞ்சு, கன்று)

Kahira-Grade 3 Work Sheet 2020

05. பாம்பு - குட்டி என்பது போல, மாடு ................................

( கன்று. பிள்ளை, குஞ்சு)

06. பனை - வடலி என்பது போல, கமுகு ...............................

( குட்டி, பிள்ளை, நாற்று)

07. வாழை - குட்டி என்பது போல, நெல் ..............................

(கன்று, நாற்று, வடலி)

**வருடம் முழுவதும் கவனம் செலுத்த வேண்டிய சொற்கள்**

| | | |
|---|---|---|
| **මම** | மம | நான் |
| **මට** | மட்ட | எனக்கு |
| **මගේ** | மகே | எனது |
| **කොහේ ද?** | கொஹெத? | எங்கே? |
| **එහේ** | எஹெ | அங்கே |
| **මෙහේ** | மெஹெ | இங்கே? |
| **මොකක් ද?** | மொகக்த? | என்ன? |
| **මේ** | மே | இது |
| **අර** | அற | அது |
| **ඔබගේ** | ஒபகே | உங்கள் |
| **මොකක්ද?** | மொகக்த? | எது? |
| **තිබෙන්නේ/තිබේ** | திபென்னே / திபே | உள்ளது |

| | | |
|---|---|---|
| **ආයුබෝවන්** | ஆயுபோவன் | (வணக்கம்) |
| நான் .......... | **නාන් .................** | **(මම ...............)** |
| எனது பெயர் ........... | **එනදු පෙයර් ..............** | **(මගේ නම** |

Kahira -Grade 3 Work Sheet 2020

| | | |
|---|---|---|
| **ගන්න** | Gகன்ன | (எடுங்கள்) |
| **දෙන්න** | dh தென்ன | (தாருங்கள்) |
| **යන්න** | யன்ன | (போங்கள்) |
| **එන්න** | என்ன | (வாருங்கள்) |
| **කියන්න** | கியன்ன | (சொல்லுங்கள்) |
| **ගයන්න** | Gகயன்ன | (பாடுங்கள்) |
| **බලන්න** | Bபளன்ன | (பாருங்கள்) |
| **ලියන්න** | லியன்ன | (எழுதுங்கள்) |
| **හිනාවෙන්න** | ஹினாவென்ன | (சிரியுங்கள்) |
| **නැගිටින්න** | நெGகிடின்ன | (எழும்புங்கள்) |
| **වාඩිවෙන්න** | வாடிவென்ன | (இருங்கள்) |
| **අත්පුඩි ගසන්න** | அத்புடிகசன்ன | (கைதட்டுங்கள்) |
| **දුවන්න** | dhதுவன்ன | (ஓடுங்கள்) |
| **නවතින්න** | நவ(த்)தின்ன | (நில்லுங்கள்) |
| **උඩපනින්න** | உடபனின்ன | (துள்ளுங்கள்) |

பின்வரும் பழங்களை வாசித்து விளங்கிக் கொள்வோம்.

| | | |
|---|---|---|
| அன்னாசிப்பழம் | **අන්නාසි** | அன்னாசி |
| மாம்பழம் | **අඹ** | அம்ப |
| வாழைப்பழம் | **කෙසෙල්** | கெசேல் |
| பப்பாசிப்பழம் | **පැපොල්** | பெப்போல் |
| தோடம்பழம் | **දොඩම්** | தொடம் |


Kahira -Grade 3 Work Sheet 2020

## உடலின் முக்கிய பாகங்களை வாசித்து விளங்கிக் கொள்வோம்

| | | |
|---|---|---|
| தலை | **හිස** | ஹிச |
| கை | **අත** | அத்த |
| கால் | **කකුල** | ககுல |
| வயிறு | **බඩ** | ப( B)ட( D) |
| முகம் | **මුහුණ** | முகுண |

Work Sheet 2020

பின்வரும் பூக்களின் பெயர்களை வாசித்து விளங்கிக் கொள்வோம்.



අරලිය (அரலிய) அலரிப்பூ



රෝස (ரோச) ரோஜாப்பூ




පිච්ච (பிச்ச) மல்லிகைப்பூ



නෙළුම් (நெலும்) தாமரைப்பூ

# உடலின் முக்கிய பாகங்களை குறிக்கும் சொற்களுடன் இணைக்குக

| | | |
|---|---|---|
| அத்த | | முகுண |
| ககுல |  | |
| ப( B)ட( D) | | ஹிச |

Kahira -Grade 3 Work Sheet 2020

சிங்கள வாக்கியங்களை வாசித்து அறிவோம்

| | | |
|---|---|---|
| **ඔබේ නම මොකක්ද ?** | ஒபே நம மொகக்த? | (உங்கள் பெயர் என்ன?) |
| **ඔබේ ගම කොහේද ?** | ஒபே கம கொஹேத | (உங்கள் ஊர் எது?) |
| **මගේ ගම ..................** | மகே கம................ | (எனது ஊர்............) |

மேலும் சில சிங்களச் சொற்களுக்கான கருத்தை வாசித்து விளங்குவோம்.

| | | |
|---|---|---|
| **එක** | எ(க்)க | (ஒன்று) |
| **දෙක** | தெ(க்)க | (இரண்டு) |
| **තුන** | துன | (மூன்று) |
| **හතර** | ஹதற | (நான்கு) |
| **පහ** | பஹ | (ஐந்து) |
| **නිල් පාට** | நில் பா(ட்)ட | (நீல நிறம்) |
| **කොළ පාට** | கொள பா(ட்)ட | (பச்சை நிறம்) |
| **කහ පාට** | கஹ பா(ட்)ட | (மஞ்சள் நிறம்) |
| **සුදු පාට** | சுது பா(ட்)ட | (வெள்ளை நிறம்) |
| **කළු පාට** | களு பா(ட்)ட | (கறுப்பு நிறம்) |

தரம் 2 இரண்டாம் தேசிய மொழிப்பாடத்திட்டத்தில் (சிங்களம்) இடம்பெற்றுள்ள சொற்களும் கொற்பிரயோகங்களும்.

සුබ උපන් දිනයක් වේවා
சு(B)ப உ(P)பன் (Th)தினய(K)க் வேவா
பிறந்தநாள் வாழ்தது் க்கள

| | | |
|---|---|---|
| ස්තුතියි | ஸ்து(Th)திய் | (நன்றி) |
| **පොත ගන්න.** | (P)பொத(Th-கன்ன | (புத்தகம் எடுங்கள்) |
| **පැන්සල දෙන්න.** | (P)பென்(S)சல (Th)தென்ன | (பென்சில் தாருங்கள்) |
| **මෙහෙ එන්න** | (M)மெஹே என்ன | (இங்கே வாருங்கள்) |
| **එහෙ යන්න.** | எஹே யன்ன | (அங்கே போங்கள் செல்லுங்கள்) |
| **මෙහෙ බලන්න** | (M)மெஹே (B)பலன்ன | (இங்கே பாருங்கள்) |
| **අතනින් ඉඳගන්න** | அ(Th)தனின் இந்த(G)கன்ன | (அங்கே இருங்கள்) |
| **අතනට දුවන්න** | அதன(Dh)ட துவன்ன | (அங்கே ஓடுங்கள்) |
| **මෙහෙ නවතින්න** | (M)மெஹே நவதின்ன | (இங்கே நில்லுங்கள்) |